**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.216/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | எழிலரசன் | Prosecution | --- |
| Father Name | ஏழுமலை | Defence | DW1 Chief |
| முகவரி | ஆத்துக்குடி | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 32/2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**20.11.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரி ஆஜர்**

**எதிரி தரப்பு எதிரியின் முதல் விசாரணை**

நான் ஆத்துக்குடியில் விவசாய வேலை பார்த்துவருகிறேன். நான் ஒரு சமூக ஆர்வலர் ஆவேன். 03.06.2020 ந்தேதி பள்ளிக்கூடம் திறக்கும் நேரத்தில் நான் எங்கள் ஊர் VAOவிடம் பள்ளிக்கூட மாணாக்கருக்கு ஏன் தாமதமாக வருமான சான்று வழங்குகிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு VAO என்னுடைய விருப்பப்படி தான் கொடுப்பேன் என்று என் மீது கோபமாக கூறினார். சம்பவத்தன்று விஏஓ பணியில் இல்லை. சம்வத்தன்று மாலை வட்டார வளர்ச்சி அலுவலர் குடி மாராமத்து பணிக்காக குளத்தை தூர் வார அரசு அனுமதியினை நான் வாங்கியிருந்தேன்.

அந்த குளத்தை தூர் வார அரசு அனுமதி நகலினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அதனை குறியீடு செய்துகொள்ள வேண்டுகிறனே். அதன் அசல் என்னிடம் கிடையாது வட்டார வளர்ச்சி அலுவகத்தில் தான் இருக்கும். **மேற்படி ஆவண நகல் எசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** (மேற்படி ஆவணம் நகல் என்பதால் அரசு தரப்பில் அதனை குறியீடு செய்ய ஆட்சேபனைக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) எங்கள் ஊரில் உள்ள குளத்தை தூர்வாரவில்லை என்றால் ஊரே வெள்ளக்காடாக மாறிவிடும். அரசு அனுமதியோடு தூர் வார சென்றிருந்தோம். அப்போது வந்த VAO யாரை கேட்டு தூர் வாருகிறீர்கள் என்று கேட்டார். நான்

VAO அனுமதி உள்ளது என்று சொன்னேன். அதற்கு அந்த VAO " நீ PDO மற்றும் தாசில்தார் ஆகியோரை பார்த்துவிட்டார் என்னை பார்க்கவில்லை "என்று கூறினார். அதனால் கோபம் கொண்டு போய்விட்டார். என் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளார். நான் VAOவை திட்டவும் இல்லை, பணி செய்யவிடாமல் தடுக்கவும் இல்லை என் மீது பொய்யாக வழக்கு போட்டுள்ளார். எனக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நடந்தது இது தான்.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரனை ஒத்தி வைக்கப்படுகிறது.**